## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்
## (சிட்கோ)

## புதியஅறிவிப்புகள் 2013 – 14

### 1. புதிய தொழிற்பேட்டைகள் ஏற்படுத்துதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (SIDCO) மூலமாக,

(1) விழுப்புரம் மாவட்டம், காட்டுவன்னஞ்சூர்

(2) தருமபுரிமாவட்டம், பர்வதனஹல்லி

(3) தருமபுரிமாவட்டம், ஈச்சம்பாடி

(4) அரியலூர் மாவட்டம், மல்லூர்

(5) கடலூர் மாவட்டம், பெரியநெசலூர்

(6) இராமநாதபுரம் மாவட்டம், சக்கரக்கோட்டை

(7) நாமக்கல்மாவட்டம், வேட்டம்பாடி

ஆகிய7 இடங்களில் புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2. திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் அமைந்துள்ள சிட்கோ தொழிற்பேட்டையில் பொது வசதி மையம் அமைத்தல்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சிறு தொழில்வளர்ச்சி நிறுவனத்தால் (சிட்கோ) பராமரிக்கப்பட்டுவரும், திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் அமைந்துள்ளஅரசு தொழிற்பேட்டையில் ரூ.25 இலட்சம் செலவில் பொது வசதி மையம் ஒன்று அமைக்கப்படும்.